**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் :CC.No.79/2026**

**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அரசப்பன் | தொழில் | : | இல்லை |
| கிராமம் | : | கரையாளனூர் | வயது | : | 66 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 08.07.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கரையாளனூரில் குடியிருந்து வருகிறேன். நான் வேலை எதுவும் செய்யவில்லை. எதிரிகளை எனக்கு தெரியும். 1ம் எதிரி என்னுடைய சகோதரர். 2ம் எதிரி அவருடைய மகன். 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 07.00 மணிக்கு நான் வயலுக்கு போயிருந்தேன். எதிரிகள் இருவரும் கொக்கி போட்டு வயலில் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தார்கள். நான் எதிரிகளிடம் எதற்காக கொக்கி போட்டு தண்ணீர் பாய்ச்சுகிறீர்கள் என்று கேட்டேன். அப்போது எதிரிகள் இருவரும் நீ யாருல கேட்க என்று சொன்னார்கள். அப்போது நான் எனக்கும் பங்கு இருக்கிறது என்று சொன்னேன். அப்போது எனது தம்பி எதிரி திரவியம் என்னை பார்த்து, என்ன தேவடியா புண்ட மவனே என்று சொல்லி கொண்டே என்னை எனது தம்பி திரவியம் அரிவாளால் முன்தலையில் 3 வெட்டுக்கள் வெட்டினார்.

அதன் பின்னர், எதிரி மணிகண்டன் வேப்பங்கம்பால் எனது வலது தோள்பட்டை கையிலும், இடது கையிலும் அடித்தார். என்னுடைய வாட்ச் கீழே விழுந்தது. பின்னர் நான் மயங்கி விட்டேன். பின்னர் என்னுடைய மகள் என்னை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு 30 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். நான் கைரேகை வைத்து கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.09 18:02:23 +0530